# UNIT-V

# மெய்ப்பாட்டியல்

FUTURE VISION

## மெய்ப்பாட்டியல்

**பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நால்நான்கு என்ப.**

- நாடக அரங்கில் தோன்றிய 32 பொருளும். 16 இல் அடங்கும். 1. காணப்படும் பொருளும், 2. பொறியுணர்வும் ஒன்று. 3. குறிப்புணர்வும், 4. மெய்யின்கண் தோன்றலும் ஒன்று. இவற்றை நான்காகக் கொண்டு நகை. அழுகை முதலான எண் சுவையுடன் பெருக்கினால் 32 ஆகும். மேலே குறித்தவாறு நான்கும் இரண்டாகி ஒன்று கலப்பதைக் கொண்டு. எண்சுவையுடன் பெருக்கினால் 16 ஆகும்.

- பண்ணை – விளையாட்டு ஆயம். முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினார் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமம் நுகரும் இன்ப விளையாட்டு என்பது பேராசிரியம். நாடகத்தில் 32 என்பது. அதனைச் சுருக்கி எண்ணும்போது 16 என அடங்கும்.

## 32 – 16 – 8 ஆதல்

**நால் இரண்டு ஆகும் பாலுமா ருண்டே.**

- முன்பு பதினாறு எனினும், இலக்கியத்தைப் பொறுத்தவரை இது எட்டெனவே படும். பாடலால் படிப்பவனிடம் விளையும் சுவையே வெளிப்பட நிற்பதால் இங்கு எட்டு என்பது பொருந்தும்.

### எட்டு வகை மெய்ப்பாடுகள் - சுவைகள்

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.**

- உடலில் மெய்ம் மயிர் சிலிர்த்தல், கண்ணீர் அரும்பல், வியர்த்தல் என வெளிப்படும் போதுதான், அவை புறத்தார்க்குப் பலனாகின்றன. அவ்வாறு புலனாகும் சுவைகள் எட்டு; நகைச் சுவை, அழுகைச் சுவை (அவலம்), இளிவரற் சுவை, மருட்கைச் சுவை அச்சச் சுவை, பெருமிதச் சுவை, வெகுளிச்சுவை, உவகைச் சுவை.

- இளிவரல் - தனது நிலையில் தாழ்வுபடுதல், மானம் இழந்த நிலை, மருட்கை – வியப்பு – வீரம், பிறரினும் ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்றல், வெகுளி – கடுங்கோபம், உவகை - இன்ப நுகர்ச்சி.

### நகைச்சுவை

**எள்ளல் இளமை பேதைமை மடம் என்று**
**உள்ளப்பட்ட நகை நான்கு என்ப.**

- நகை மெய்ப்பாடு: பிறருடைய ஏளனத்திற்கு ஒருவர் ஆளாதல். இளமையால் மடம்பட நடந்து சிரிக்கப்படுதல். பேதைமை – அறிவின்மையால் பிறர் சிரிக்கும்படி தோர்தல் மடன் - ஒன்றை மற்றொன்றாக மாற்றியுணர்தல். பழுதைப் பாம்பென நடுங்குவதைக் கண்டவர் சிரிப்பர்.

### அழுகைச்சுவை

**இளிவே இழவே அசைவே வறுமை என**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே.**

- அழுகை எனும் அவலச் சுவை; இளிவு – பிறரால் தாழ்வுபடுத்தப்பட்டு எளியராய் நிற்றல். இழவு – பொருள் இழப்பு உயிரிழப்புப் போல்வன. அசைவு – செல்வராக இருந்த நிலை கெட்டு வறியராதல், உயர்ந்த நிலையிலிருந்தவர் தாழ்வுபடுதல். வறுமை, இவை அவலம் தோன்ற அடிப்படைக் காரணங்கள்.

### இளிவரல் சுவை

**மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே.**



FUTURE VISION

- இளிவரல்: அவமானப் படுத்தப்படுதல்; தாழ்வு படுத்தப்படுதல் மூப்பு – முதமை, பிணி – தீராத பிணி, வருத்தம் - பயனற்ற முயற்சி, மென்மை – வலிமையின்மை.

**மருட்கைச் சுவை**

**புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே.**

- மருட்கை – வியப்பு, புதுமை என முப்பு காணாததைக் கண்டாலும் வியப்புண்டாகும். அளவு கடந்து பெரிதாயிருப்பன, மிகமிக நுண்ணியதாய் இருப்பன, ஒன்றினிடம் காணப்படும் புதிய ஆக்கம், மாற்றம்.

- மதிமை சாலா – முன்பு அறியாத, அறிவுக்கு எட்டாததாலும் வியப்பு ஏற்படும். புதுமை – முன்பு காணாதது. பெருமை – எல்லை கடந்து பெரியனவாய்க் காணப்படுதல். சிறுமை – மிகமிக நுண்ணிதாய்க காணப்படுதல், ஆக்க – ஒன்று மற்றொன்றாதல், ஒன்றல் பரிணாமம் அல்லது வளர்ச்சி மாற்றம்.

**அச்சச்சுவை**

**அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே.**

- அச்சம்: தெய்வம் எனவும் பேய் எனவும் நம்பி அஞ்சுதல், சிங்கம் புலி கரடி வெளி நாய்களுக்கு அஞ்சுதல், திருடர்களுக்கு அஞ்சுதல், தமக்கு மேலதிகாரிகளுக்கு அஞ்சுதல், ‘தம் இறை’ என்றதன் நுட்பம் அவரவா் அவா்களுக்கு மேலேயுள்ளவா்களுக்கு அஞ்ச நேரும் என்பதாம்.

**பெருமிதச்சுவை**

**கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்**
**சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே.**

- பெருமிதம்: பிறரெல்லாம் வீரம் என்றதைத் தொல்லாசான் பெருமிதம் என்றாா். கல்வியால், விரத்தால் (தறுகண்), புகழால், கொடையால் பெருமிதம் தோன்றும்.

- பெருமிதம் - வீரம் மட்டுமன்று; பிறருடன் ஒப்ப நில்லாது எதிலும் மேம்பட நிற்றல், கல்வி – படிப்பறிவு. நூலறிவு, தறுகண் - போரில் காட்டும் வீரம், ஆண்மை, இசைமை – புகழ், கொடை - ஈதல் மட்டுமன்று; உயிரும் உறுப்பும் அனைத்தும் வழங்கும் தன்னீகம்.

**வெகுளிச்சுவை**

**உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே.**

- வெகுளிச் சுவை கடுஞ்சீற்றம், உறுப்பறை – கைகால்களை வெட்டுதல் போன்ற துன்புறுத்தும் செயல்கள், குடிகோள் - குடிமக்களை வருத்துதல், அலைத்தல் - தடிகொண்டு அடித்தல் வைதல் முதலியன, கொலை – கொல்ல முயலுதல், இவற்றால் பிறப்பது சீற்றமெனும் மெய்ப்பாடு.

**உவகைச் சுவை**

**செல்வம் புலனே புணா்வு விளையாட்டு என்று**
**அல்லல் நீத்த உவகை நான்கே.**

- உவகைச் சுவை இன்ப நுகா்ச்சி, பிறரைத் துன்புறுத்தி அடையும் மகிழ்ச்சியல்லாத, இயல்பான நெறிப்பட்ட மகிழ்ச்சி இது, இது செல்வமுடைமையாலும் அதனை நுகா்தலாலும் வரும். புலன் - ஐம்புல நுகா்ச்சிகள், அரிய காட்சிகள், இசை கேட்டல் போல்வன, புணா்வு – காம இன்ப நுகா்ச்சி, விளையாட்டு – ஆறும் குளமும் காவும் சென்று துணையுடன் ஆடிப்பாடி மகிழ்தல். பொதுவான விளையாட்டுக்களம் இதிலடங்கும்.

FUTURE VISION

**பல்வேறு மனவுணர்வு வெளிபாடுகள்**

**ஆங்கு அவை ஒரு பாலாக ஒருபால்**
**உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்**
**தன்மை அடக்கம் வரைதல் அன்பு எனாஅக்**
**கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்**
**நாணுதல் துஞ்சல் அரற்று கனவு எனாஅ**
**முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை**
**கருதல் ஆராய்ச்சி விரைவு உயிர்ப்பு உனாஆக்**
**கையாறு இடுக்கண் பொச்சாப்பு பொறாமை**
**வியர்த்தல் ஐயம் மிகைநடுக்கு எனாஆ**
**இவையும் உளவே அவை அலங்கடையே**

✷ முன்னர்க் கூறியவை நாடக வழக்கை ஒட்டியன. 'ஆங்கு அவை ஒருபாலாக, ஈங்கு இன்னொரு பால்' (பகுதி) என்று. மீண்டும் ஒரு 32 மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன. இவை உலக வழக்கைப் பெரிதும் தழுவியன. மக்களின் மனநிலைகளின் வெளிப்பாடுகள்; உள்ளுணர்வின் புறத் தோற்றங்கள்; அதாவது உள் மன நிலைகள்; கண்ணிலும் முகத்திலும் உடலிலும் வெளிப்படுவன.

1. செல்வம் உடைமையால் வரும் தோற்றம்.
2. மனம் இன்புறுதலால், கண்ணிலும் முகத்திலும் வெளிப்படும் இனிய மலர்ச்சி.
3. மனம் விருப்பு வெறுப்பின்றி நடவு நிலையோடிருப்பதைக் காட்டும் கண்ணும் முகமும்.
4. அருளுடைமையக் காட்டும் கனிவு.
5. ஒருவரது தன்மை அவரது இயல்பைக் காட்டும். இது குடிப்பிறப்பில் அமையும் சாயலின் வெளிப்பாடு
6. அடக்கமுடைமையைக் காட்டும் தோற்றமும் செயலும்.
7. வேண்டாதவற்றை அறவே விட்டுவிலகும் மன உறுதி.
8. அன்புடைமையைக் காட்டும் கண்ணீர் அரும்பல் முதலியன.

1. கைம்மிகல் - எதிலும் எல்லை கடத்தல், அடக்கமின்மையின் அடையாளங்கள்.
2. நலிதல் - பிறரை நலியும் மனப்போக்கு
3. சூழ்ச்சி – சிந்தித்தல்.
4. வாழ்த்தல் - பிறரை வாழ்த்துதல்.
5. பண்புடையாரிடம் காணப்படும் நாணம் - வெட்கவுணர்வு, கூச்சப்படுதல்.
6. துஞ்சல் - நடத்து வரும்போதே உறங்குவது போன்ற தோற்றம்.
7. அரற்று – வாய் விட்டுக்கதறிப் புலம்புதல்
8. கனவு – கனவு கண்டு வாய் வெருவுதல்

1. முனிதல் - எந்நேரமும் வெறுப்புணர்வே முகத்தில் காணப்படுதல்.
2. நினைவு – முன்னே நடந்ததொன்றை நினைவுக்குக் கொண்டுவர இயலும் முகத் தோற்றம்.
3. வெருவுதல் - திடீரெனத் தோன்றும் திகைப்பு
4. மடிமை – சோம்பல்
5. கருதல் - உட்கருத்து
6. ஆராய்ச்சி – சிலர் கண் சும்மா இராது, விட்டினுள் புகுந்தால் அனைத்தையும் துழாவிப் பார்க்கும்.
7. விரைவு – சிலர் எதிலும் வேகமாக இருப்பார்கள் எந்ரேமும் ஒரு துடிதுடிப்பாகவே இருப்பர்.
8. உயிர்ப்பு – பெருமூச்சு விடுதல், ஆசை மிக்கவர் பெருமூச்சு விடுவது கடுமுழைப்பால் மூச்சொலி மிகுவதும் உண்டு.

1. கையாறு – செயலற்று வருந்துல்
2. இடுக்கண் - வெளிவர முடியாதது. இருபக்கமும் இடிபடுவது.
3. பொச்சாப்பு – கடமை மறிதி, மிகக் கவனமாக இருக்க வேண்டியவற்றில் மறதி ஏற்படுதல்.
4. பொறாமை – கண்ணும் முகமும் சொல்லி விடுதலால் இதுவும் ஒரு மெய்ப்பாடு
5. வியர்த்தல் - கரை கடந்த வரத்த மிகுதி போன்றவற்றில் உள்ளும் புறமும் வியர்க்கும்.
6. ஐயம் - எதிலும் சந்தேகப் பார்வை, எதையும் நம்பாத் தன்மை
7. மிகை – செருக்கும்.
8. நடுக்கு – குளிரால் நடுங்குவதுபோல் உடல் அசைதல். அளவுகடந்த அச்சத்தாலோ. துன்பத்தாலோ ஏற்படுவது. இவை யாவும் மனநிலை வெளிப்பாடுகளாய் இலக்கியத்தில் படம் பிடித்தாற்போல் பாடப்படும்.

FUTURE VISION

✷ மேலே வகைப்படுத்தியவை தவிர, அவற்றுள் அடங்கியும் அடங்காதும் எத்தனையோ மனித மனநிலை பெய்ப்பாடுகள் உள. சங்கப் பாடல்கள் புறவுலக இயற்கையைப் படம் பிடிப்பன. அதுபோல் மாந்தர்தம் அகவுணர்வு மனநிலைகளையும் படம் பிடிப்பன. 'அவை யலங்கடை இவையும் உள' எனுமாறு, பிறிதொரு மெய்ப்பாட்டுப் பட்டியலையும் தருகிறார் தொல்காப்பியர். இவை முன் மாதிரிகள் என்றே கொள்ள வேண்டும். இவற்றுட் பல ஒன்றின் ஒன்று மேவி வருவன. ஆங்கு அவை – முன்னே விரித்தவை, ஒரு பாலாக – ஒரு பகுதியாக ஒருபால் - மற்றொரு பட்டியலாக இவை இலக்கியத்திற்குச் சிறப்புரிமை உடையன, பலவகை மனவுணர்வுப் படப்பிடிப்புகள்.

## இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும்

### மெய்ப்பாடுகள் முதல்நிலை

**புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல்**
**நகுநயம் மறைத்தல், சிதைவு பிறர்க்கு இன்மையொடு**
**தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.**

✷ முதன் முதலிற் கூட்டம் நிகழும் போது தலைவி எவ்வாறு நடத்து கொள்வாள். முற்றிலும் பாலியல் உளவியல் சார்ந்த மெய்ப்பாடுகள். இவை நாடக வழக்கிற்கும் உலக வழக்கிற்கும் பொதுவானவை. இவற்றை ஆறு படிநிலைகளாகச் சொல்கிறார் தொல்காப்பியர். முதல் மூன்று நிலைகள் புணர்ச்சி நிகழுமுன் தலைவிபால் தோன்றுபவை; பின் மூன்று நிலைகள் புணர்ச்சி முடிந்தபின் நிகழ்பவை. தலைவன் பால் நிகழ்வனவற்றை வரையறைப்படுத்த இயலாமையின். அவை பற்றிக் கூறிற்றிலர்.

1. புகுமுகம் புரிதல் - மனம் இசைந்ததை முகமலர்ச்சியால் காட்டுதல்.
2. பொறி நுதல் வியர்த்தல் - நாணத்தால் நெற்றியில் புள்ளி புள்ளியாக வியவர்வைத் துளிகள் அரும்புதல்.
3. நகுநயம் மறைத்தல் - அன்பின் வெளிப்பாடாகச் சிரிக்கத் தோன்றுவதை மறைக்க முயலுதல், மறைக்க முயலுகிறாள் என்பது ஒரு மெய்ப்பாடாவதில், எவ்வளவு நுட்பம் உளது?
4. சிதைவு பிறர்க்கு இன்மை – தன் உறுதிப்பாடு சிதைந்ததை, மனத்திண்மை கலங்கி விட்டதைப் பிறர் அறியாதபடி மறைக்க முயலுதல். இவை முதல்நிலை மெய்ப்பாடுகள்.

### இரண்டாம் நிலை

**கூழை விரித்தல், காதொன்று களைதல்,**
**ஊழணி தைவரல், உடைபெயர்த்துடுத்தலொடு**
**கெழீஇய நான்கே இரண்டென மொழிப.**

✷ தலைவன் காதலியைத் தொட்டுத் தழுவுகின்றான் அந்நிலையில் அவள் தன்வயம் இழக்கின்றாள்.

1. கூழை விரித்தல் - அவனது அடர்ந்த கூந்தல் அவிழ்ந்து விரிகிறது; கட்டிய கூந்தல் கலைந்து விழுகிறது.
2. காது ஒன்று களைதல் - அன்று காதின் துளைகளில் தொடு எனப் பூவே, பொன்னோ அணியாக வெறுமனே செருகப்பட்டிருக்கும். திருகாணி இராது. அவ்வகையான தோடு தானே கழன்று விழும். காது ஒன்று என்பது காதிலுள்ள ஒன்றும் எனப் பொதுவாகப் பொருள்பாடும். தன்னையறியாது தலைமுடி அவிழ்தலும் காதணி கழந்து விழுதலும் நிகழும்.
3. ஊழணி தைவரல் - ஏனைய வளையல், விரற்செறி (மோதிரம்) போல்பவையும் கழன்று விழுவன போல் உணர்வேற்படுதலால், அவற்றைத் தடவி மீண்டும் இறுகச் செறிவிக்க முயலுவாள்.
4. உடைபெயர்த்து உடுத்தல் - உடையும் நெகிழ்வதுபோல் உணர்வேற்படும். அதனால் அதை அவிழாது மீட்டும் மீட்டும் இறுகப் பற்றி உடுத்திக் கொள்ள முயல்வாள். இவை நன்கு தழுவியதும் தன்னை மறந்து. 'பரவசம்' என்கிறார்களே. அதுபோன்ற நிலையில் நிகழ்வன. 'நங்கை தன்னை இழந்தாள்; தலைவனுக்குதல் தலைப்பட்டாள்' என்பது இதன் பொருள்.

### மூன்றாம் நிலை

**அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல்**
**இல்வழி யுறுத்தல், இருகையும் எடுத்தலொடு**
**சொல்லிய நான்கே மூன்றுஎன மொழிப.**

✷ புணர்வு நிகழுமுன், முன்பென்றும் இல்லாத புது அனுபவத்தால் தலைவி தன் மறைவிடத்தை மறைத்துக் காத்துக் கொள்வாள் போலக் கைகளால் முயல்வாள்.
1. அதை 'அல்குல் தைவரல்' என்பார் ஆசான்.
2. அணிந்தவை திருத்தல் - இடையிலும் கழுத்திலும் பிறவாறும் அணிந்துள்ளவற்றைத் திருத்துவதுபோல் நடிப்பாள்.



FUTURE VISION

3. இல் வலியுறுத்தல் - மனம் இசைந்தும். இசையாதது போல் மறுக்கவும் தடுக்கவும் அரிதின் முயலுதல்
4. இருகையும் எடுத்தல் - தன்னையிழந்து இருகைகளையும் கூட்டத்திற்கு இசைவாக மேலே தூக்குதல். தன்னை மறந்து தலைவனைத் தழுவி இருகைகளையும் உயர்த்துதல்.

✷ மூன்றாம் நிலையில் நிகழ்வன. அல்குல் - வயிற்றுக்குக் கீழ் உள்ள பகுதி, மறைவிடம். தன்னைப் பேணிக் கொள்ள முயலுதல். உடை பெயர்த்து உடுத்தவள் அதன் பின் 'அற்றம்' மறைக்க முயல்வது. அணிந்தவை – இடையிலும் பிறவாறும் அணிந்தவை குலையாது திருத்துதல். இல் - இல்லாத ஒன்று, மனம் இசைந்தும் இசையாதது போல, வலியுறுத்திக் காட்ட முயலுதல், வேறு வழியின்றி இரு கைகளையும் மேலே தூக்குதல். இது புணர்ச்சி உடம்பாடு.

**இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் நிகழ்வன முதல் நிலை**

**பாராட்டு எடுத்தல், மடம் தப உரைத்தல்**
**ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல்,**
**கொடுப்பவை கோடல், உளப்படத் தொகைஇ**
**எடுத்தல் நான்கே நான்கென மொழிப.**

1. பாராட்டு எடுத்தல் - தலைவி தலைவன் மீது பெருமைப்பட எண்ணுதல். உயர்த்தி நினைத்தலை எடுத்தல் என்றார்.
2. மடம் தப உரைத்தல் - இதுவரை அடக்கமாய்ப் பேசாதிருந்தவள் அது (மாறும்படி) தலைவனிடம் சிலவற்றைப் பேசத் தொடங்குவாள்.
3. ஊரார் மனத்தில் சிறிதும் ஈரமின்றிப் பேசும் பழிப் பேச்சுக்களைக் கேட்டு நாணி வருந்துதல்.
4. கொடுப்பவை கோடல் - தலைவன் தரும் தழையுடை, கண்ணி, மாலைகளை ஏற்றுக் கொள்ளுதல்.

✷ இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு, முதலில் - நான்காம் நிலையில் நிகழ்வன இவை. முன்னர் நிகழும் பன்னிரண்டும் மூன்று படிநிலைகள் ஆனது போல. பின்னர் நிகழும் பன்னிரண்டும் மூன்று படிநிலையின.

**அடுத்த நிலை**

**தெரிந்து உடம்படுதல், திளைப்பு வினைமறுத்தல்**
**கரந்திடத்து ஒழிதல், கண்டவழி உவத்தலொடு**
**பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.**

✷ தெரிந்து உடம்படுதல் - இது தவறோ என முதலில் எண்ணியவள். பிறகு நன்கு சிந்தித்து. மீண்டும் மீண்டும் காண உடன்படுதல் 2. திளைப்பு வினை மறுத்தல் - தோழியருடன் ஆடிப்பாடி இன்பத்தில் திளைப்பதே பொழுது போக்காய் இருந்தவள். இப்போது அதை வெறுத்து ஒதுங்குதல் 3. கரந்திடத்து ஒழிதல் - மறைவான இடம் தேடித் தனித்திருக்கவே முயலுதல் 4. தலைவனைக் கண்டதும் கரை கடந்து மகிழ்தல். இவை இரண்டாம் நிலையின.

**இறுதி நிலை**

**புறஞ்செயச் சிதைதல், புலம்பித் தோன்றல்**
**கலங்கி மொழிதல், கையறவு உரைத்தலொடு**
**புலம்பிய நான்கே ஆறென மொழிப.**

1. புறஞ்செயல் சிதைதல் - தலைவன் தலைவிக்குத் தொய்யில் எழுதியும் மாலை சூட்டியும் அலங்கரிக்கும் போது அவனைப் பிரிய நேருமோ எனத் தலைவி கலங்குவான்.
2. புலம்பித் தோன்றல் - தலைவன் பிரிவால் தலைவி தனிமை வருத்தத்தோடு காணப்படுதல்.
3. கலங்கி மொழிதல் - மனக் கலக்கமுற்றுத் தடுமாறிப் பேசுதல்.
4. கையறவு உரைத்தல் - செயலற்ற நிலையை வாய்விட்டு உரைத்தல்

✷ இனித் திருமணம் நிகழ்தல் வேண்டுமே என்ற அச்சம் பிடித்துக் கொள்ளும். அதன் விளைவுகள் இவை.

✷ தொல்காப்பியர் இம் மெய்ப்பாடுகளையுமா கூற வேண்டும் எனச் சிலர் கருதுவர். இன்று பள்ளி அளவிலேயே பாலியற்கல்வி வேண்டுமென்பார் இதன் சிறப்பை அறிந்து போற்றுவர்.

FUTURE VISION

**திருமண நிமித்தங்கள்**

**அன்ன பிறவும் அவற்றொடு சிவணி**
**மன்னிய வினைய நிமித்தம் என்ப.**

- மேலே குறித்த 24 மெய்ப்பாடுகளும் தவிர, அவை போன்ற பிறவும் பலவுள. அவ்வாறு உட்கூறுகளாக வரும் அனைத்தும் இவ்விருபத்து நான்குடன் இணைந்து நிகழ்தற்குரியனவாகும். இவை உலகில் நிலையாக நிகழ்ந்துவரும். திருமண வாழ்வுக்கு நிமித்தமானவை என்பர்.

**வினையுயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே.**

- உயிர் மெலிவது போலும் புணர்ச்சி வேட்கை மிகுமிடத்து. மேலே கூறிய 24 மெய்ப்பாடுகள் முழுவதுமோ. சிலவோ இல்லாமலும் கூட்டம் நிகழ்தலும் கூடும்.

**மேலும் உள்ளவை.**

**இவையும் உளவே அவையலங் கடையே.**

- அவை அனைத்தும் களவில் நிகமும் 24 மெய்ப்பாடுகள். அவை தவிரவும். பின்னே வருவனவும் அவற்றின் தொடர்ச்சியாகக் களவொழுக்கத்தில் நிகழ்தல் கூடும்.

**களவுக்காலப் பிரிவு மெய்ப்பாடுகள்**

**இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்,**
**எதிர்பெய்து பரிதல், ஏதும் ஆய்தல்,**
**பசியிட நிற்றல், பசலை பாய்தல்,**
**உண்டியிற் குறைதல், உடம்பு நனிசுருங்கல்,**
**கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்**
**பொய்யாக் கோடல், மெய்யே என்றல்,**
**ஐயம் செய்தல், அவன்தமர் உவத்தல்,**
**அறன் அழித்துரைத்தல், ஆங்கு நெஞ்சழிதல்,**
**எம்மெய்யாயினும் ஒப்புமை கோடல்,**
**ஒப்புவழி உவத்தல், உறுபெயர் கேட்டல்,**
**நலத்தக நாடின் கலக்கமும் அதுவே**

- 1. பொதுவாகவும் இவற்றைப் பிரிவுக்கால மெய்ப்பாடுகள் எனலாம் இன்பத்தை வெறுத்தல் - இன்பத்துக்குக் காரணமான தென்றல் பூ மதி எதைக் கண்டாலும் வெறுத்துப் பேசுதல். 2. பிரிவுத் துன்பத்தால் புலம்புதல். 3. தலைவனது உருவ வெளிப்பாடு கண்டு வருந்துதல் 4. தலைவன் தன்னைக் கூடுதற்குத் தடையாக வருவன பற்றி ஆராய்தல் 5. பசி வருத்தவும் உண்ணாதிருத்தல் 6. பசலை நோயால் மேனிநிறம் கருத்தல். 7. முன்பு உண்டதை விட உணவு சுருங்குதல். 8. உடல் மிகவும் மெலிதல். 9. கண்கள் உறங்க மறுத்தல் 10. கனவு கண்டு மயங்குதல் 11. மெய்யைப் பொய்யெ மறுகுதல் 12. பொய்யை மெய்யே என மயங்குதல் (கார்காலம் வருமுன்பே வந்ததாக மயங்குதல் போல்வன) 13. தலைவன் தன்னைப் பிரிவானோ ஐயுறுதல். 14. தலைவனின் சுற்றத்தார், உறவினர் வரக் கண்டு மகிழ்தல். 15. வருத்த மிகுதியான் அறத்தையே பழித்துரைத்தல். 16. அவ்வாறு பழித்ததற்காக நெஞ்சுருகுதல் 17. காதலர் தம் உறுப்புக்களோடு ஒத்தவை எவை கண்டாலும் அதையுணர்ந்து சொல்லுதல். 18. அவ்வாறு ஒப்புமை கண்ட வழி அவனையே கண்டதுபோல் மகிழ்தல். 19. அவன் புகழ் கேட்டு இன்புறுதல். 20. மனக்கலக்கமுறுதல். பிரிவின் போது மனம் கலங்கி மொழிவதால் நேர்வனவே. முற்கூறிய பத்தொன்பதும் என்பதால். இவ் இருபதாம் மெய்ப்பாடாகிய ‘கலக்கத்தைத்’ தனியே பிரித்துக் கூறியுள்ளார்.

**வரைவுக்குத் தூண்டுபவை**

**முட்டுவயின் சுழறல், முனிவுமெய்த் நிறுத்தல்,**
**அச்சத்தின் அகறல், அவன்புணர்வு மறுத்தல்,**
**தூதுமுனிவு இன்மை, துஞ்சிச் சேர்தல்,**
**காதல் கைம்மிகல், கட்டுரை இன்மை என்று**
**ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்.**

- முழு மனமகிழச்சியொடு கூடும் கூட்டம் ‘அழிவில் கூட்டம்’ இதில் வருவன ‘வரைந்து எய்தும் அக்கூட்டத்திற்கு எதுவான மெய்ப்பாடுகள்’ என்பார் பேராசிரியர். 1. முட்டுவயின் சுழறல் - கூட்டத்திற்கு முட்டுப்பாடு – தடை ஏதும் ஏற்பட்ட வழி தலைவி கடிந்து கூறுவாள் 2. தன் உள்ளத்து வெறுப்பெல்லாம் மெய்ப்பாடு மூலம் தலைவனுக்கு உணர்த்துவாள் 3. அலராலும் தலைவன் வரும் வழியில் உள்ள இடையூறு பற்றியும் அச்சமுற்று அவனை ‘வராதே’

எனத் தடுக்க முயல்வாள். 4. அவன் கூட விரும்புவதை நேரே மறுத்துரைப்பாள். 5. அடிக்கடி பறவை முதல் பாணன் வரை தூதுவிட நினைப்பாள். 6. சோர்வுற்ற வழி வருந்தி அவனிடம் செல்வாள் 7. காதலுணர்வு எல்லை கடக்கவே வருந்துவாள். 8. பிறர் பேசவும் தான் எதிர்பேசாது மோனம் சாதிப்பாள். இவை எட்டும் தலைவனை 'இனிக் களவு நீட்டிக்காதே; விரைவில் மணந்து கொள்' எனத் தூண்டுவனவாகும்.

**வரைந்தெய்திய பின் நிகழ்பவை**

**தெய்வம் அஞ்சல், புரை அறம் தெளிதல்,**
**இல்லது காய்தல், உள்ளது உவர்த்தல்,**
**புணர்ந்துழி உண்மை, பொழுது மறுப் பாக்கம்,**
**அருள்மிக உடைமை, அன்புதொக நிற்றல்,**
**பிரிவாற் றாமை, மறைந்தவை உரைத்தல்**
**புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ**
**சிறந்த பத்தும் செப்பிய பொருளே.**

- 'வரைந்தெய்திய பின்னர்த் தலைமகள் மனத்து நிகழ்வன இவை' – என்பது பேராசிரியம் 1. குல தெய்வம், வழிபடு தெய்வத்திற்கு அஞ்சுதல் 2. மேலான இல்லறத்தைத் தெளிந்து வாழ முற்படுதல். 3. இல்லது காய்தல் - தலைவனிடம் இல்லாத குறையையும் இருப்பதாகச் சொல்லிச் சினந்து ஊடுதல். 4. உள்ளது உவர்த்தல் - தலைவனிடம் உண்மையாக உள்ள தலையளியையும் நம்பாதாள் போல வெறுத்துப் பேசுதல் 5. புணர்ந்துழி உண்மை – தலைவன் புணர்ந்தவழி, அவனுடன் உண்மையான அன்பைக் காட்டி மகிழ்வித்தல் 6. பொழுது மறுப்பாக்கம் - பொழுதை வரையறுத்து வாழக்கூடிய வாய்ப்புடைமை 7. அருள்மிக உடைமை - இல்வாழ்வார் பிறர் எல்லோர்க்கும் துணையாதல். 8. அன்பு தொக நிற்றல் - உறவினருடன் அன்பு பொருந்தியிருத்தல். 9. பிரிவாற்றாமை – தலைவி பரிவாற்றாது வறுந்துதல் 10. மறைந்தவை உரைத்த புறஞ்சொல் மாணாக்கிளவி – தலைவனது மறைவான குறைகளை ஊரார் பழித்துப் பேசும் அதனை மிகாது தடுத்துத் தலைவன் பெயர் கெடாது காக்கவே தலைவி முயலுதல், சிறப்புடைய இவை பத்தும் இல்லற வாழ்வில் தலைவிக்குரியன.

**பத்துவகைப் பொருத்தம்**

**பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு,**
**உருவு, நிறுத்த காம வாயில்,**
**நிறையே, அருளே, உணர்வொடு, திருஎன**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.**

- 1. நற்குடிப் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். 2. அந்நற்குடிக் கேற்ற நல்லொழுக்கம் இருவரிடமும் இருக்க வேண்டும். 3. இருவரிடமும் ஆண்மை ஆளுமை ஒத்திருக்க வேண்டும். 4. அகவை (வயது) ஒப்புமை வேண்டும். 5. உருபு – வடிவ ஒப்புமையும் வேண்டும். பார்ப்பவர் பொருத்தமான சோடி எனல் வேண்டும். 6. நிறுத்த காம வாயில் என்பது தொல்லாசான் சிந்தித்துச் சொன்ன அரிய கருத்து. உடலில் அமைந்து காம நுகர்வுக்கான கூறுகள். ஒருவர் மிக்க காமவெளியுடையவராகவும் மற்றவர் அளவாகத் துய்ப்பவராகவும் இருந்தால் ஒத்துவராது. 7. நிறை மனத்தைத் திருமணமான பின் கண்டவாறு ஓட விடாது தடுத்து நிறுத்ததுதல். 8. அருளுடைமை அதன் அடிப்படையான அன்பும் உடையவர்களாக இருவரும் திகழ வேண்டும். 9. உணர்வு – ஒருவரை ஒருவர் அறிதல்; புரிந்து கொள்ளுதல் வேண்டும். 10. திரு – செல்வம். செல்வமுடைமையால் வரும் மன மகிழ்ச்சியே திரு. என்றும் எந்நிலையிலும் திருவுடையார் போன்ற மன நிறைவு அது. செல்வம் என்பது சிந்தையின் நிறைவே. இருப்பத்துப் பொருத்தமுமே மிக இன்றியமையாதன.

**பொருத்தாக் குணங்கள்**

**நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி,**
**வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை,**
**இன்புறல், ஏழைமை, மறப்போடு, ஒப்புமை**
**என்றிவை இன்மை என்மனார் புலவர்.**

- பத்துப் பொருத்தம் கூறியவர் அம் மணமக்களிடம் அமையக் கூடாத தீய குணங்கள் என்று ஒரு பன்னிரண்டு குணங்களைப் பட்டியலிட்டுக் கூறுகிறார். 1. ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படுவது கூடாது. 2. ஒருவர் மீது ஒருவர் தீமை செய்ய நினைக்கும் கொடுமை. 3. ஒருவர் மற்றவரிடம் தன்மைப் பற்றி வியந்து பேசுதல். 4. ஒருவர் மற்றவரைப் பற்றிப் புறங்கூறுதல். 5. கடுஞ் சொற்களால் திட்டுதல். 6. ஒருவர் மற்றவருக்குச் செய்ய வேண்டிய கடமையை மறத்தல். 7. இல்லறக் கடமைகளைச் செய்யாது சோம்பியிருத்தல். 8. ஒருவர் பிறர் குடியினும் தன் குடிமேலென நினைத்துப் பேசுதல். 9. ஒருவர் மற்றவரைவிடத் தாமே இன்புறுவதாக எண்ணிக்கொள்ளுதல். சேர்ந்தின்புறாது. தனித்து இன்பங் காணுதல். 10. அறிவின்மை, வறுமையுமாம். 11. ஒருவர் மற்றவரை மறந்துவிடுதல் 12. கணவன் மனைவியைப் பிற மகளிரோடு ஒப்பிடுதலும் மனைவி கணவனைப் பிற ஆடவரோடு ஒப்பிடுதலும் கூடாது. இது தவறான நினைவுகளுக்கும் தீயஒழுக்கங்கட்கும் கொண்டுபோய் விடும். இவ்வுளவியலைச் சுட்டிய தொல்காப்பிய நுட்பம் காலத்தால் மாறாதது.

**திறனாளிகளின் திறன்**

**கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்.**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.**

- ✸ மெய்ப்பாடு எனும் சுவையை உணர. சுவைஞனுக்கும் அதுபற்றிய முன் அனுபவம். கூறிய அறிவு, பொறி, புலனுணர்வு வேண்டும். கண்ணாலும் செவியாலும் ஏனைய உடல், மூக்கு, நா ஆகிய பொறிகளாலும் உலகைக் கூர்த்து அறிந்து அனுபவிக்கும் உணர்வுடைய மாந்தர்களுக்கே, இலக்கிய இன்பமும் புலனாகும். மெய்ப்பாடு என்பது நல்ல சிறந்த நயம் மிக்க பாட்டுப் பொருளை உணர்ந்து (பொருள்கோள் - பொருள் கொண்டு அனுபவிப்பது. அது முன்னே சொன்னவாறு ஐம்புல உணர்வுள்ள மக்களுக்கே இயைவதாகும். மற்றவர்களாம் இச்சுவையுணர்வை எண்ணிப் பார்க்கவும் முடியாது.

## உவமையியல்

**ஒப்புமைப் பொதுப் பண்புகள்**

**வினை பயன் மெய் உரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமத் தோற்றம்.**

- ✸ உவமைக்கும் (உவமிக்கப்படும்) பொருளுக்கும் சில பொதுத் தன்மைகள் இருந்தால்தான். ஒன்றை மற்றதனோடு உவமிக்க முடியும். அப்பொதுமைகள் நான்காகும்.

| | | |
|---|---|---|
| வினை | - | (செயல்) குயில் போலப் பாடினாள். |
| பயன் | - | பேரறிவாளன் செல்வம் ஊருணி நீர் நிறைந்தது போன்றது. |
| மெய் | - | தாமரை போன்ற முகம். |
| உரு | - | பால் போலும் வெண்ணிலா (நிறம்) |

- ✸ இப் பொதுமைகளாலேயே உவமைகள் தோன்றுகின்றன. அதனால் இவை வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம், உருவுவமம் என நான்கு வகைப்படும்.

**பொதுப்பண்புகள் விரவியும் வருதல்**

**விரவியும் வருஉம் மரபின என்ப.**

- ✸ இப்பொதுமைகள் ஒன்றற்கு ஒன்றே வருமென்பது இல்லை; கலந்தும் வரும்.

- ✸ பிறைபோலும் நெற்றி – வடிவமும் நிறமும் பொதுமைகள், கயல் போலும் கண்கள் - வடிவமும் பிறழ்தலும் பொதுமைகள்.

**உயர்ந்தவையே உவமையாக வரும்.**

**உயர்ந்தன் மேற்றே உள்ளுங் காலை**

- ✸ இப்பொதுமை பற்றி உவமை கூறும்போது, உவமையாக வருவது அப்பொதுமைப் பண்பில் உயர்ந்ததாக இருக்க வேண்டும். வினை, பயன், மெய், உரு எனும் பொதுமையில் அவை சிறந்தவையாக இருக்க வேண்டும். புலிபோலப் செய்தான் எனாலம் நாய் போலப் பாய்ந்தான் எனல் தவறு.

**உவமை கூறத்தோன்றும் நிலைக்களன்கள்**

**சிறப்பே நலனே காதல் வலியொடு**
**அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப.**

- ✸ சிறப்பு, நலன், காதல், வலி - இவை நான்கின் அடிப்படையில் உவமை கூறுவர். ஒன்றைச் சிறப்பிப்பதற்காக உவமை சொல்லலாம்; கண்ணகி அன்ன கற்புடையாள் - கற்பின் சிறப்பைக் கருதிக் கூறப்பட்டது. அழகு என்பதை 'நலன்' என்றார். நல்லெழில், நற்பண்பு எல்லாம் அடங்கும். புள்ளி வைத்த கோலம் போலும் நீலவானம், காதல் - அன்பு, பாசம், காதலால் கூறுதல் - கிளி போலும் அழகினாள், குயில் போலும் குரலினாள், வலிமை – ஒருவரது வலிமை மிக்க தன்மை, 'அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்' (சிங்கம் போன்று பிறரை வருத்தும் வலிமையுடைய கரிகாலன் - பட்டினப் பாலை)



FUTURE VISION

**ஒன்றன் இழிவைப் புலப்படுத்தவும் உவமை கூறப்படும்.**

**கிழக்கிடு பொருளொடு ஐந்தும் ஆகும்.**

- கிழக்கிடு பொருள் - கீழ்ப்படுக்கப்படும் பொருள் இழிவு படுத்துவது ஒன்றை இழைிவு படுத்தவும் உவமை வரும். இதனைச் சேர்த்து உவமை சொல்லத் தூண்டும் சூழல் ஐந்தாகும். 'பன்றி அனைய பகைவர்', 'அரசியலில் அரக்கிகளும் அரக்கர்களும் போன்றவர்களே மிகுதியாயினர்' - இவ்வாறு வருவன இழிவின் மிகுதியைப் புலப்படுத்த வருவன.

**முதலும் சினையும்**

**முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்**
**நுதலிய மரபின் உரியவை உரிய.**

- முதல் என்பது முழுமைப் பொருள் சினை என்பது அதன் உறுப்பு. மரமும் கிளையும் - முதலும் சினையும், மனிதனும் கையும், - முதலும் சினையும், இவற்றை உவமை கூறும்போது முதலுக்கு முதலை உவமை கூறுவர்; சினைக்குச் (உறுப்புக்கு) சினையை உவமை கூறுவர். இவற்றை மாற்றியும் கூறுவர். ஆனால் வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்த மரபுப்படிதான், சொல்லவேண்டும். அப்போதுதான் படிப்பவனுக்கு நாம் சொல்வது விளங்கும். அரண்மனை போன்ற வீடு (முதலுக்கு முதல்); கடல் அலை போலும் கருங்கூந்தல் (சினைக்கு சினை); நீலக்கடல் போலும் கருவிழிகள் (முதல் சினைக்கு); 'கருங்கூந்தல் போன்று அலையும் கார் முகில்' (சினை முதலுக்கு). இவ்வாறு பழம் மரபை ஒட்டியே உவமை கூறத்தோன்றும்.

**உருபு இன்றியும் உவமை வருதல்**

**சுட்டிக் கூறா உவம மாயின்**
**பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே.**

- பொருள் - உவமிக்க எடுத்துக்கொண்ட பொருள் முகம் - இது உவமேயம் எனவும் கூறப்படும். உவமம் அல்லது உவமை – தாமரை - இது உவமானம் என்றும் கூறப்படும். தாமரை போலும் முகம் என்று, போலும் என்ற உவமை உருபை வைத்துச் சொல்வது சுட்டிக் கூறும் உவமம். தாமரைமுகம் என்ற சொல்லிவிட்டால். அங்கு உவம உருபு சுட்டிக் கூறப்படவில்லை. தாமரை போலும் அழகிய முகம் - இதில் உவமை உருபும் பொதுப்பண்பும் சுட்டிச் சொல்லப்பட்டுள்ளன. இவை யாவும் அடங்கத் தாமரை முகம் என்றே கூறிவிடுவது சுட்டிக் கூறா உவமமாகும். பிற்காலத்தில் இதை 'எடுத்துக்காட்டுவமையணி' என்றனர்.

**பொதுப்பண்பு சமமாக வேண்டும்.**

**உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்.**

- உவமையும் உவமிக்கப்படும் பொருளும் தம்மின் ஒப்புமையுடையன என உலகம் ஒப்ப வேண்டும். உலகத்தார் ஏற்குமாறு உவமை சொல்வதே மரபு, உவமையைக் கேட்டு உலகத்தார் மகிழவேண்டுமென்பார் பேராசிரியர், ஒப்புமைகண்டு சொல்வது ஓர் அரிய திறமையாகும்.

**உருவகமும் உவமையே**

**பொருளே உவமம் செய்தனர் மொழியினும்**
**மருளறு சிறப்பின.்.து உவமமாகும்.**

- பொருளை (உவமேயத்தை), உவமமாக ஆக்கி, உவமையை உவமேயமாம் பொருள் போலச் செய்து சொன்னாலும் அது குற்றமற்ற சிறப்பினையுடைய உவமையாகவே கொள்ளப்படும். தாமரை போன்ற அழகிய முகம் என்பதை மாற்றி மகளிர் முகம் போலப் பொலிவு தரும் தாமரை எனச் சொன்னாலும். அது முகத்தின் சிறப்பையே இன்னும் மிகுவிக்கும், உவமை என்பது உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதுதானே முன் சொன்ன விதி, இதைச் சுருக்கி முகத்தாமரை என்பதும் அதுவே பவளவாய் என்பதை வாய்ப்பவளம் என்பதும் அவ்வாறு வருவதே, இவ்வாறு வருவனவற்றைப் பிற்காலத்தார் 'உருவகம்' என்பர் தொல்காப்பியர் அதுவும் உவமையே, உவம வகைகளுள் ஒன்றே என்று கூறுகிறார்.

- வடநூலார் ரூபகம் என்பர். உருவகம் என்பதில் இரண்டாம் எழுத்து 'ரு' வுடன் முதல் 'உ' சேர்ந்து, 'ரூ' ஆகும். அதாவது உருவகமே ரூவகம், ரூபகம் ஆகும். ரூபகம் உருவகம் என மொழிநூல் முறைப்படி ஆகாது. இலது – லேது என ஆவது போல்வது இது. இதை 'உயிரிடம் பெயரல்' என்பர். வடமொழிக்கே உரியன எனச் சாதித்துத் தமிழ் கடன் பெற்றது. என்பார் நடுநிலையாகச் சிந்திக்க என்றுமே முன் வந்ததில்லை தமிழறிஞர்களிலேயே காலக் கோட்பட்டுப் பிறழ உணர்ந்து பேசியும் எழுதியும் வருவோர் பலராவர்.


FUTURE VISION

**உவமையில் பெருமையும் சிறுமையும்.**

**பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்
குறிப்பின் வரூஉம் நெறிப்பாடுடைய.**

- உவமை கூறுங்கால் மிகப் பெரிதாகவும் மிகச் சிறிதாகவும் - அதாவது கரைகடந்து உயர்த்தியும் சிறிதாக்கியும் கூறலாமா? கூறலாம். ஆனால் அவை பொதுமை பற்றிய சிறப்பினால் சொல்பவரது மனக்குறிப்பின் வழித் தோன்றும் நெறியினையுடையன, 'கடலன்ன காமம்' என்றால் கடல் எவ்வளவு பெரிது. சொல்பவர் காமத்தின் மிகுதியைச் சுட்ட உயர்வு நவிற்சிபோல், மிகப் பெரிய ஒன்றை உவமை சொல்கிறார். அவரது மனக்குறிப்பின்வழி எண்ணிப் பார்த்தால், எல்லையற்ற மனத் தவிப்பை உணர்த்த அவ்வுவமையே பயன்படுகிறது. குளம் அன்ன காமம் என்றால் சிறப்புமாகாது; சொல்வோர் உணர்வும் வெளிப்படாது. நூலிடை என்றால் - பெண்ணின் இடையை நூலை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கலாமா? சொல்வோர் குறிப்பின் வழி பார்த்தால், அது சரியே, அவ்வாறு சொன்னால்தான் பெருமையும் நுண்மையும் மனக் கண்ணிற்குத் தோன்றும்.

**உவம உருபுகள்**

**அவைதாம்
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்
கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்ப தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்
புலப் பொருவ பொற்ப போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓட புரைய என்றவை எனாஅ
ஆறு ஆறு அவையும் அன்ன பிறவும்
கூறுங்காலைப் பல்குறிப்பினவே.**

**உவம உருபுகள்**

- தொல்காப்பியர் 36 உவம உருபுகளைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். இவை அவர் காலத்துப் பெருவழக்கினவாக இருந்திருத்தல் வேண்டும். மேலும் அன்றைய இலக்கியப் பரப்புப் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கூட இதனால் அறியற்பாலன. ஏதோ ஒரு காரணம் பற்றி அவர் ஆறு ஆறாகா. ஆறு வகைகள் கூறுகின்றார், 'அன்ன ஏற்ப்ப உறழ ஒப்ப என்ன மான' (6), எள்ள விழைய இறப்ப நிகர்ப்ப கள்ள கடுப்ப (6), காய்ப்ப மதிப்பை தகைய மருள மாற்ற மறுப்ப (6), புல்ல பொருவ பொற்ப போல வெல்ல வீழ (6), நாட நளிய நடுங்க நந்த ஓட புரைய (6), இவை ஆறு × ஆறு = முப்பத்தாறு. அவையும் அவை போல்வன பிறவும் உவம உருபுகள். இவை உவமை கூறுங்கால் சொல்லாலும் பொருளாலும் பல குறிப்பினையுடையன.

- இளம்பூரணரும் பேராசிரியரும் 'அன்ன பிறவும்' என்பதனால் கூறும் உவம் உருபுகள்: நோக்க நேர அனை அற்று இன் ஏந்து ஏர் சீர் கெழு செத்து ஏர்ப்ப ஆர துணைப்ப மலைய அமர.

- இவை பெயரெச்சம் வினையெச்சம் வினைமுற்று இடைச்சொல் எனச் சொல்லால் பல குறிப்பினாவாக வரும். கயல் வென்ற கண் - அழகால் வென்றுவிட்டது என்றும் பொருள். 'கிளை செத்து மொய்த்த தும்பி'. சொத்து – கருதி எனவும் பொருள் இவை போல்வன பொருளால் பல குறிப்பின.

- இனி உவம உருபுகள் பெயரெச்சத் தன்மையுடனும் (புலி போன்ற சாத்தன்), வினையெச்சம் போலவும் (புவி போலப் பாய்ந்தான்), வினைமுற்றுப் போலவும் (அவன் புலிபோலும் இடைச்சொல்லாகவும் (புலி அன்ன மறவன்) வரும் என்றும் விளக்கப்படுகின்றன.

**வினை உவம உருபுகள்**

**அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழ தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்.**



FUTURE VISION

✸ வினை (செயல்) எனப்படும் பொதுமைக்குரிய உவம உருபுகள் எட்டு.

**அன்ன ஆங்க மான இறப்ப**
**என்ன உறழ தகைய நோக்கு என்பன**

✸ 'கொன்றன்ன (கொலை செய்தாற் போன்ற) இன்னா செயினும்' – அன்ன வினை உவம உருபு

**அவற்றுள் அன்ன என் உருபு**

**அன்ன என் கிளவி பிறவொடும் சிவணும்.**

✸ 'அன்ன' – உவம உருபாகிய இடைச்சொல் பிற பொதுமைகளிலும் இடம் பெறும். 'மழை அன்ன கொடை' – பயனுவமம்.

**பயன் உவம உருபுகள்**

**எள்ள விழையப் புல்லப் பொருவக்**
**கள்ள மதிப்ப வெல்ல வீழ**
**என்றாங்கு எட்டே பயனிலை உவமம்.**

✸ பயன் பற்றிய உவம உருபுகள்; எள்ள விழைய புல்ல பொருவ கள்ள மதிப்ப வெல்ல வீழ. விண் பொரு புகழ் - விண்ணை ஒத்த புகழ், பயனுவம உருபு – பொரு (பொருவ)

**மெய்(வடிவ) உவம உருபுகள்**

**கடுப்ப ஏய்ப்ப மரு))ளப் புரைய**
**ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்.**

✸ மெய்வடிவ உவம உருபுகள்; கடுப்ப ஏய்ப்ப மருள புரைய ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப

✸ வேய் மருள் பணைத்தோள் - மூங்கில் போன்ற பருத்த தோள். மருள் - வடிவ உவம உருபு.

**உரு (வண்ண) உவம உருபுகள்**

**போல மறுப்ப ஒப்பக் காய்த்த**
**நேர வியப்ப நளிய நந்த என்று**
**ஒத்து வரு கிளவி உருவின் உவமம்.**

✸ வண்ண உவம உருபுகள் (உருஉவமம்) வண்ணம் (நிறம்) பற்றியன; போல மறுப்பு ஒப்ப காய்த்த நேர வியப்ப நளிய நத்த

✸ 'நேர' பொதுப்பட்டியலில் இல்லாதது. அன்ன பிறவும் என்பதால் வந்தது. பொன் போல நிறமுடையாள் - நிறம் பற்றியது.

**உருபுகளின் பொருத்தமும் பொருளும்**

**தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே.**

✸ வினை பயன் மெய் உருவிற்கு, இவ்விவ்வுருபு வருமென்ற இது தொல்காப்பியர் காலத்தில் பெருவழக்காக இருந்தவை. பின்னர்ச் சங்க காலத்தில் இவற்றுட் பல வேறு பொதுமைக்கு மாறி வந்ததை இளம்பூரணர் எடுத்துக் காட்டுகிறார். தத்தம் மரபு பற்றி, அதாவது அவ்வவ் உரபுக்குரிய பொருளை வைத்து, வெவ்வேறு விதமாக மாறியும் வரும், இதைப் பேராசிரியர் மேலும் தெளிவுபடுத்துவார். 'விழைய' என்றால் விரும்ப என்றும். 'புல்ல' என்றால் ஒன்றுபட்டுப் பொருந்த என்றும் 'மதிப்ப' என்றால் உயர்த்தி எண்ண என்றும் 'கள்ள' என்றால் கவர்ந்து கொள்ள (கதுவ) என்றும் இவ்வாறு இவ் உவம உருபுகளுக்குத் தனிப் பொருள்களும் உண்டு. அவை குறிப்பால் பெறப்படும். அப்பொருள் அடிப்படையிலும் இவை பயன்படுத்தப்படும். 'மா வென்ற மடநோக்கின்' என்றால் மாவடுவைப் போன்ற என்பது மட்டுமன்றி, அதனை வென்ற – அதனினும் சிறந்த கண்கள் எனவும் பொருள்படும். மாரி வீழ் இருங்கூந்தல் என்றால் வீழ் உவம உருபு மட்டுமாகாது, மேகம் விழுவது போல் - தொங்குவதுபோல் கீழே தாழும் கரிய கூந்தல் எனவும் குறிப்பால் பொருளொன்றும் தோன்றும். வீழ் என்பதற்கு விழைவு, விருப்பம் என்றும் பொருளுண்டு, கார் முகிலும் இது போன்ற கருப்பும் செறிவும் நீட்சியும் தனக்கும் வேண்டுமென விரும்பும் கூந்தலெனவும் பொருள் கொள்ளலாம். இதையே தத்தம் மரபிலும் பொருள் தோன்றும். எனப் பேராசிரியம் விளக்குகிறது.



FUTURE VISION

**உவமப் பொருளை உணரும் நெறிமுறைகள்**

**நாலிரண்டாகும் பாலுமாருண்டே**

- உவமைகள் நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்ற மெய்ப்பாடு எட்டன் அடிப்படையிலும் தோன்றும். காதலியை 'அமிழ்தனையாய்' என்பது, உவமை அடிப்படை உவமை.

- எட்டு மெய்ப்பாடுகளுக்கும் உரியனவாக, இவ் உவமைகளைப் பகுத்துணரவும் வாய்ப்புண்டு, நகை உவமை, அவல உவமை, இளிவரல் உவமை என இவ்வாறு கொள்ள வேண்டும்.

**பெருமை சிறுமை மெய்ப்பாட்டு அடிப்படையின**

**பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்**
**வழி மருங்கு அறியத் தோன்றும் என்ப.**

- சிலசமயம் காதலாலோ, சினத்தாலோ, பிறவற்றாலோ மிக உயர்வு நவிற்சிபோல உவமை கூறப்படும், அல்லது மிக நுண்மை அல்லது சிறுமை பற்றியும் உவமை தோன்றும். அது முற்கூறிய எட்டுவகை மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்க வருபவை. நீ செய்த உதவி கடலைப்போல் பெரிது. இவள் என் கருமணியிற் பாவை போல்வாள், இவை உள்ளத்துணர்வுகள் மெய்ப்பாடுகளாக வெளிப்படுவதை உணர்த்தும் உவமைகள்.

**உவமையும் பொருளும்**

**உவமப் பொருளின் உற்றது உணரும்**
**தெளிமருங்கு உளவே திறத்தியலான.**

- பாவேந்தர் பாரதிதாசன், "நமையெல்லாம் வடமொழி தூக்கிடும் தாம்பு, நம் உரிமைதனைக் கடித்தது அப்பாம்பு" எனப் பாடியுள்ளார். தாம்பு (கயிறு) போன்றது; பாம்பு போன்றது. இதில் நாம் உணர வேண்டிய எத்தனையோ செய்திகள். பல நூல்களாக விரிக்கத்தக்கவை அடங்கியுள்ளன. காலங்காலமாகத் தமிழிலிருந்த அனைத்தையும் சமற்கிருதமயமாக்கிய வரலாறு அது. இதுவே உவமத்தைக் கொண்டு. பொருளை அதன் திறமெலாம் அறிந்து தெளிவதாகும்.

- தலைவி, 'களவு உடம்படுநர் போலத் தலை கவிழ்ந்து நிலம் கிளையா நின்றாள்' என்னும் போது, கையும் களவுமாக அகப்பட்டவர் நிலைமை எல்லாம், தலைவிபால் நிகழ்தலை உணர்த்துகிறது. உவமைகள் இவ்வாறு உவமேயமாம் பொருளின் நிலைமைகளைத் தெளிவுபட உய்த்துணர வைப்பனவாதலை இந்நூற்பா விளக்குகிறது.

**உலக வழக்கு**

**உவமப் பொருளை உணருங்காலை**
**மரீஇய மரபின் வழக்கொடு படுமே.**

- அங்ஙனம் உவமத்தின் பொருளை – உவமத்தால் உவமிக்கப்பட்ட பொருளின் திறத்தை உணரும்போது. அது நிலைபெறப் பொருந்தி வந்த வரலாற்று மரபில், வழங்கி வந்த வழக்கின் பாற்படும். 'இது நனைத்துச் சுமப்பது போன்ற காரியம்' என்றால், அது பற்றிய உலக வழக்க அனுபவம் உள்ளவர்க்குத் தெளிவாக விளங்கும். 'தேட் கடுப்பன்ன நாட்படு தேறல்' என்றால் தேள் கொட்டிக் கடுப்பதும் நாட்பட ஊறவைத்த மதுவின் தெளிவை உண்டதால் ஏற்படும் கடுப்பும் பற்றிய உலக வழக்கைத் தெரிந்திருக்க வேண்டும். உலக வழக்குப் பற்றிக் கேள்விப்பட்டோ. அறிந்தோ உள்ளவர்க்கே புலனாவன மிகப் பல உவமைகளாகும்.

**இரட்டைக் கிளவி – உவமை**

**இரட்டைக் கிளவி இட்டை வழித்தே.**

- உவமையை இரண்டு சொற்கள் இணைந்து வரும் தொடராகச் சொன்னால் உவமிக்கப்படும் பொருளையும் அவ்வாறே இரண்டு சொற்கள் சேர்ந்த இணையாகச் சொல்ல வேண்டும். 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர்' (410), 'துனியும் புலவியும் இல்லாயின் காமம் கனியும் கருக்காயும் அற்று' (1306)

- 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்' (410) எனும் குறளில் விலங்கும் மக்களும் என்ற இரட்டைச் சொற்கள், 'இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்' எனும் இரட்டைப் பொருள்களுக்கு உவமையாயின. இரட்டையைக் கல்லாதவரும் கற்றவரும் என மாற்றிக் கொள்ள வேண்டும்.



FUTURE VISION

**உள்ளுறை உவமம்**

**பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி**
**முன்ன மரபின் கூறுங்காலைத்**
**துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே.**

- உள்ளுறை உவமப் பொருளை. அது அகப் பாடலில் அமைந்து கிடப்பதை அறிய வழி; பிறவற்றோடு பொருந்தாது பாடலில் வரும் கருப்பொருள்களாம் உயிரினங்களின் பிறப்பியல்பொடு நோக்க வேண்டும். 'முன்னம்' எனப்படும் இலக்கிய மரபுப்படி அது கூறப்பெற்றிருக்கும். அங்ஙனம் கூறப்பட்டுள்ள அதை. அவ்வாறு ஐயமற அறியவல்ல திறனாளிகள் அல்லது கேட்பவர்கள் தெளிவு பெற அறிவரேல், அவ்வுட் பொருளை அறிய இயலும்.

- அகத்திணைக்கே உரியதெனக் கூறப்பட்ட உள்ளுறை உவமத்தின் இலக்கணமும் அதன் பொதுத் தன்மைகளாலான வகைமையும் விளக்கப்படுகின்றன. (அகத்திணையியல் 992, 993, 994, 995, பொருளியல் 1188, 1189, 1190, 1991, ஆகியவற்றின் தொடர்ச்சி இது)

- பிறப்பொடு நோக்குதல் - தலைவனை வண்டு, எருமை, வாளைமீன், நீர் நாய் போன்றவற்றோடும் தலைவியை நெல், நெய்தல் பூ, போன்றவற்றோடும் பரத்தையைத் தாமரை, கரும்பு, மாங்கனி போன்றவற்றோடும் பொருத்தி உள்ளறை உவமை கூறுதல், அவை அம்மாந்தர்தம் இயல்வு நோக்கிக் கூறப்பட்டு, படிமமாக ஆகியவை, துணிவினோர்தாம் இவற்றைத் துணிதல் சாலும். அதாவது உலக இயல்பும் இலக்கியமரபும் அறிந்தவர்களே உள்ளுறை பொருளை உணர முடியும்.

**உள்ளுறை அல்லது உவமப்போலி ஐந்து வகைப்படும்**

**உவமப் போலி ஐந்தென மொழிப**

- உள்ளுறை என்பது வெளியே சொல்லப்பட்ட ஒன்றைவைத்து. உட்பொருளை அறிவது அவ் உள்ளுறை ஐந்து வகைப்படும் என்றார் முன்பு (1188), இங்கு உள்ளுறை உவமையும் ஐந்து வகைப்படும் என்கிறார். உள்ளுறை உவமையை. உவமப் போலி என்பது, அது உவமை போல் ஒன்றுக்கொன்று பொருந்தி, உட்பொருளை அறியும் ஒரு புடை ஒப்புமையுடைமையினாலேதான்.

**உள்ளுறை உவமப்போலி வகைகள்**

**தவலருஞ் சிறப்பின் அத்தன்மை நாடின்**
**வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்**
**பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப.**

- குறையற்ற சிறப்பினையுடைய அதன் தன்மையை ஆராய்ந்தல், உள்ளுறை உவமை கூறுவதற்குரிய பொதுமைகள் ஐந்தாகும். வினை, பயன், உறுப்பு (மெய், உடல்), உரு (நிறம், குணம்), பிறப்பு (முன்னே சுட்டிய பிறப்பியல்பு). இவற்றை முறையே வினையுவமப் போலி, பயனுவமப் போலி, உறுப்பு (மெய்) உவமப்போலி, உருவுவமப்போலி, பிறப்புவமப் போலி எனல் வேண்டும். 'கரை சேர் வேழம் கரும்பிற்பூக்கும் துறை கேழ் ஊரன்' என்றால் வேழமாகிய பொய்க் கரும்பையும் நல்ல கரும்பையும் ஒருங்கேவுடைய ஊரன் என்றாகும். அதாவது தலைவன் பரத்தையையும் தலைவியையும் இன்ப நுகர்ச்சியில் சமமாகக் கருதுவதை இது சுட்டிக் காட்டுவதால், 'பயனுவமப் போலி' என்பர்.

- 'கரும்புநடு பாத்தியில் கலித்த தாமரை, கரும்பு பசிகளையும் பெரும்புனலூர்' என்றால், காதற்பரத்தை, இற்பரத்தை போல்வன கரும்பும் தாமரையும்; சுரும்பு – தலைவன்; தலைவி தான்மட்டுமின்றி இவையும் சுரும்பின் பசி தீர்க்கும் என்று தலைவனது ஒழுக்கம் கேட்டைக் குறிப்பதால் இது வினையுவமப் போலி என்பார். பேராசிரியர்.

- 'பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய், வாளை நாளிரை பெறூஉம் ஊர' என்றது. நீர்நாய் புலவு நாறும் வாளை மீனைத் தின்று அத்தீய நாற்றத்தையே மேன்மேலும் விரும்புவதுபோலத் தலைவனும் தனது உயர்ந்த குலத்திற்கேற்ப ஒழுகாது பரத்தையரை நாடி, இழிவு படுதலையே மேன்மேலும் விரும்புவதைக் குறிக்கிறது. இதைப் பிறப்புவமப் போலி என்பார் பேராசிரியர். இவ்வாறே பிறவ்றையும் கொள்ள வேண்டும் என்பதைப் பேராசிரியர்தம் விளக்கவுரையால் நன்கு அறியலாம்.

**தலைவியும் தோழியும் உவமை கூறுதல்**

**கிழவி சொல்லின் அவளறி கிளவி**
**தோழிக்காயின் நிலம் பெயர்ந்து உரையாது.**

- தலைவி உவமை கூறினால். அவள் அறிந்த அளவிலான இடச்சூழல் அளவுக்குள்ளேயே, காணப்படும் பொருள்களை வைத்தும், அவளது அறிவு அனுபவ எல்லைக்குட்பட்டும் கூறுவாள்.

- தோழி உவமை கூறினால் அவள் வாழும் குறிஞ்சி, முல்லை முதலான நில எல்லைகளுக்குட்பட்ட கருப்பொருள்களை வைத்தே கூறுவாள். நிலம் பெயர்ந்து, வேற்றுநிலப் பொருள்களை வைத்து உவமை கூறுவதாக அமையாது. அதாவது பாடல்களில் அவரவர் உவமை கூறுவதாகப் பாடும் புலவன் இந்த எல்லைகளை மீறாது அவர்கள் உவமை கூறுவதாகப் புனைய வேண்டுமென்பது கருத்து.

**தலைவனும் பிறரும் உவமை கூறுதல்**

**கிழவோற்காயின் உரனொடு கிளக்கும்**
**ஏனோர்க்கெல்லாம் இடம் வரைவின்றே.**

- தலைவன் உவமை கூறுவதாகப் புனையும்போது, அவனுக்கு நில எல்லைகள் இல்லை. அவனது அறிவுடைமை, அனுபவங்கட்கு ஏற்ப உவமை கூறுவான். பிற அக மாந்தர் அனைவருக்கும் இவ்வாறு இடவரையறை ஏதுமில்லை அவரவர் தாம்தாம் அறியுமாற்றால் உவமை கூறுவர்.

**உவமைகளில் இனிமையும் வருத்தமும்.**

**இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்**
**உவம மருங்கின் தோன்றும் என்ப.**

- உவமைகளைக் கூறுங்கால், அவை இனிமைதரும் மகிழ்ச்சிச் சூழல்களைத் தருவனவாகவோ, வருத்தத்தைத் தரும் பிரிவுபற்றிய புலவித் தொடர்பான சூழல்களாகவோ அமையும். அகபாடல்களில் இன்பச் சூழலும் துன்பச் சூழலுமே உவமை தோன்றும் இடங்களாகும்.

**தலைவி உள்ளுறை உவமம் கூறுதல்**

**கிழவோட்கு உவமம் ஈரிடத்து உரித்தே.**

- தலைவி முன்னர்ச் சுட்டிய இனிதுறு கிளவி, துனியுறு கிளவி ஆகிய இரண்டும் இடங்களிலும் உவமை அல்லது உவமப்போலி கூறுவாள்:

**தலைமகள் உள்ளுறை உவமம் கூறுதற்குரிய இடம்**

**கிழவோற்காயின் இடம் வரைவின்றே.**

- தலைவன் உவமப்போலி (உள்ளுறை உவமம்) கூறுவதற்கு இன்ன சூழல் என்ற வரையறை இல்லை.

**தோழியும் செவிலியும் உள்ளுறை கூறுதல்**

**தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்**
**கூறுதற் குரியர் கொள்வழி யான.**

- தோழியும் செவிலியும் உவமப் போலியைப் பொருந்தும் இடம் நோக்கி கேட்போர் நன்கு உணரும்படி கூறுதற்குரியர்.

**உவமையை வெவ்வேறு முறைகளில் கூறுதல்**

**வேறுபடவந்த உவமத் தோற்றம்**
**கூறி மருங்கின் கொள்வழிக் கொளாஅல்.**

- நடையமைப்பிலும் சொல்லும் விதத்திலும் பல்வேறு வகைகளாக உவமைகள் தோன்றும் உவமையைப் பொருளாக்கிப் பொருளை உவமையாக்கிக் கூறுதல், இரண்டை அடுக்கிக் கூறி ஒன்றை உவமித்து, மற்றதை உவமிக்காது உணரும்படி விடுதல் (ஏகதேச உருவகம்), பலவற்றைச் சேர்த்து ஒன்றற்கு உவமை கூறுதல், ஒன்றற்குப் பலவற்றை உவமை கூறுதல் எனப் பலவித நடைகளிலும் முறைகளிலும் உவமை கூறப்படும். அவை கூறப்பட்டுள்ள முறையை அறிந்து. பொருள் கொள்ளுதல் வேண்டும்.

- வேறுபட வருதல் - உவமை வெவ்வேறு உருவில் கூறப்படுதல்.

FUTURE VISION

**உவமையை மறுப்பதும் உவமையுள் அடங்கும்**

**ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே**

- ‘இதற்கு இது உவமையாகுமோ?’ என மறுத்துக் கூறுதலும் ஒருவகை உவமையாக மரபுவழிப் பொருந்திவந்த வழக்குமேயாகும்.

- ‘கடந்தடு தானைச் சேரலாதனை. யாங்ஙனம் ஒத்தியே வீங்கு செலல் மண்டிலம்?’ ஞாயிறே நீ சேரலாதனுக்கு எவ்வாறு ஒப்பாவாய் எனக் கேட்கும் இது ஒரீஇக் கூறுவது. ஒப்பாகாது என்பது போல் கூறினும் இது உவமையேயாகும்.

**உவமத் தன்மையும் உவமையே**

**உவமத் தன்மையும் உரித்தென மொழிப**
**பயனிலை புரிந்த வழக்கத் தான.**

- உவமைத் தன்மை பட எப்படிக் கூறினாலும், அது உவமையாவதின் பயனை விளைக்குமானால், உவமையின் பாற்படும். உவமைத் தன்மை “உவமையாகாமல் அதன் தன்மை மட்டும் கூறப்படுவது இது. ‘பாரி பாரி என்றே புகழ்கிறீர்கள். பாரிமட்டுமன்று. உலகு புரப்பதற்கு மாரியும் உண்டு’ இதில் உவமையாகக் கூறப்படவில்லை. உலகு புரப்பதற்கு மழையும் இருக்கிறது என்பதால், எவ்வாறோ, உவமைத்தன்மை அதில் வந்து விடுகிறது. ஒரீஇக் கூறல், உவமைத்தன்மை கூறல், தடுமாறிக் கூறல் எல்லாம் வேறுபட வந்த உவமத் தோற்றத்தில் அடங்குமாயினும், இவை மட்டும் சிறப்புக் கருதி வேறு பிரித்து ஓதப்பட்டுள்ளன.

**ஐய உவமை**

**தடுமாறு உவமம் கடிவரை இன்றே.**

- ஐயப்படுதலும் ஒருவகையில் உவமமே, வண்டு கண்போல் மலர்ந்த பூவையும் பூப்போல் மலர்ந்த கண்ணையும் தெளியாது. எதில் மொய்ப்பதெனத் திகைக்கும் என்பதும். ஐயமே. இவ்வாறு தடுமாறுவதாக வருவனவும் நீக்கப்படா. ‘கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல், நோக்கம் இம் மூன்றும் உடைத்து’ (1085), இதுவும் ஐய உவமை எனப்படும்.

**அடுக்கிய உவமை**

**அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே.**

- உவமைகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குதல் தவறு பால் போலும், வெண் கொக்குப் போலும், சுண்ணம் போலும் வெண் மதிபோலும் வாண்முகம் - இவ்வாறு அடுக்கிக் கூறுதல் தவறு.

**நிரல்நிறை முதலியன அடுக்கி வரலாம்**

**நிரல் நிறுத்தமைத்தல் நிரல்நிறை சுண்ணம்**
**வரைநிலை வைத்த மூன்றலங் கடையே.**

- அடுக்கிய தோற்றம் எவ்வெவ்விடத்தில் வரலாம் என்பது இனிக் கூறப்படுகிறது.

- நிரல் நிறுத்து அமைத்தல் - நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின். அளப்பரியையே

**நிரல்நிறை –**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்கை**
**பண்பும் பயனும் அது.**

- சுண்ணம் - உவமையைத் தனித்தனியே துண்டித்து. பொருளையும் துணித்து ஓட்டுதல், இது முரண்நிரல் நிறை போல்வது.

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனையவர்.**



FUTURE VISION

✷ மக்களொடு விலங்கனையர் என மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

## செய்யுளியல்

### இலக்கிய உறுப்புக்கள்

**மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ,
யாத்த சீரே அடி யாப்பு எனாஅ,
மரபே தூக்கே தொடைவகை எனாஅ,
நோக்கே பாவே அளவியல் எனாஅத்
திணையே கைகோள் கூற்று வகை எனாஅக்
கேட்பார் களனே காலவகை எனாஅப்
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ,
முன்னம் பொருளே துறை வகை எனாஅ,
மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்
ஆறுதலை யிட்ட அந்நால் ஐந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபு எனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.**

✷ இந்நூற்பாவைத் தமிழிலக்கியத்தின் ஆலமரம் எனலாம். இதன் விழுதுகளும் கிளைகளும் பிறவுமே இலக்கிய உறுப்புகள் அனைத்தும். 1. எழுத்தொலியின் கால அளவு 2. பாடலுக்கேற்ப அமையும் எழுத்துக்களின் இயல்பு 3. அவ்வெழுத்தாலாகும் அசைவகை 4. அசை வகைகளை இணைத்து அமைத்த சீர்கள் 5. சீர்களைத் தளைத்துக் கட்டி உருவாக்கும் பாடலடிகள் சீர்கள் 6. இலக்கிய வகையாக யாக்கப்படும் யாப்பு. 7. வழிவழியாக வரும் இலக்கிய மரபு 8. தூக்கு ஓசைவகை 9. சீர்களைத் தொடுக்கும் தொடை வகை 10. பாடல்களை நோக்குப்பட பயன்படுமாறு செய்யும் நோக்கு இது தமிழ்த்திறனாய்வு 11. பா வகைகள் 12. பாக்களுக்குரிய அடிவரையறையைக் கூறுவது அளவியல் 13. அகத்திணையும் புறத்திணையும் 14. அகத்தில் களவும் கற்பும் இரு கைகோள்கள். 15. கூற்று – ஓர் அகப்பாடலில் கூறுகின்றார் இன்னாரென அறியச் செய்தல் 16. கேட்போர் - அதைக் கேட்போர் யாரென்று தெரியச் செய்வது 17. களன் - அவ்வாறு கூறவும் கேட்கவுமான சூழல் (நாடக அரங்குபோல) 18. காலவகை – முக்காலமும் பாடல் வழி உணரச்செய்தல். களம்போல நிகழும் காலமும் அறியும் படி அகப்பாடல் பாடப்படவேண்டும். 19. பயன் - பாடலில் வரும் கூற்றினால் வரும் பயன் அப் பாடலில் இராது. பாட்டுப் பொருளால், பயனை உணர வைப்பது பயன் 20. மெய்ப்பாடு என்பது பாட்டுப்பொருளைச் சுவைக்க வைப்பது. மெய்ப் பாடென்றது சொல் கேட்டார்க்குப் பொருள் கட்புலனாதலை என்பர் பேரா 21. எச்சவகை – பாட்டு முடிந்தும் பொருள் முடியாது எஞ்சி நிற்பது, சொல்லியதால், சொல்லாது விட்டதை குறிப்பெச்சம் (மனக் குறிப்பு எஞ்சி நிற்பது) 22. முன்னம் - குறிப்பால் அறியவைப்பது. ஒரு பாடலில் கூறுவாரையும் கேட்பாரையும் சூழலையும் குறிப்பால் படிப்பவரை அறியவைப்பது 23. பொருள் - புலவன் சொல்லக்கருதியதை உணர்த்தும் திறன் 24. துறை – புறத்துறைகளில் யாதென உணர வைத்தல் 25. மாட்டு – கொண்டு கூட்டு 26. வண்ணம் - பாவில் நிகழும் ஓசை – சந்த வேறுபாடுகள். வனப்புகள் எட்டு – அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயையு, புலன், இழைபு.

✷ ஆகச் செய்யுளாம் இலக்கிய உறுப்புகள் முப்பத்து நான்கு.

### 1. மாத்திரையும் 2. எழுத்தும்.

**அவற்றுள்
மாத்திரை அளவும், எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன என்மனார் புலவர்.**

✷ மாத்திரை அளவு – எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு, எழுத்துவகை மேற்கிளந்த அன்ன – முன்னே எழுத்ததிகாரத்தில் கூறியதைப் போன்றன.

### 3. அசைவகை நேர், நிரை

**குறிலே, நெடிலே, குறில் இணை, குறில் நெடில்,
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே.**



FUTURE VISION

✸ குறில், நெடில் தனித்தும் ஒற்றடுத்தும் வரும். க, கா, கல், கால்.

✸ குறிலிணை குறில்நெடில் தனித்தும் ஒற்றடுத்தும் வரும். கலம், கலாம், முன்னர்ச் சொன்னவை நான்கும் நேரசை, பின்னர்ச் சொன்னவை நான்கும் நிரையசை.

**நேர்பு, நிரைபு**

**இருவகை உகரமொடு இயைந்துஅவை வரினே**
**நேர்பும் நிரைபும் ஆகும் என்ப**
**குறில்இணை உகரம் அல்வழி யான.**

✸ இருவகை உகரம் குற்றியலுகரம், முற்றியலுகரம், முன்னே சொன்ன எழுத்துக்கள் பொருந்தி ஈற்றில் உகரம் பெற்று வரிகள் நேர்பு, நிரைபு என ஆகும். கன்று, காசு, காற்று குற்றுகர நேர்பு அசைகள், கல்லு, காவு, சார்பு முற்றுகர நேர்பு அசைகள் அலகு அலக்கு, மலாடு, பனாட்டு – குற்றுகர நிரைபசைகள் இரவு, புணர்வு, உலாவு, உராய்வு – முற்றுகர நிரைபசைகள்.

**இயலசை, உரியசை**

**இயலசை முதலிரண்டு ஏனைய உரியசை.**

✸ நேர், நிரை இவை இயலசை, அடுத்த இரண்டு நேர்பு, நிரைபு, இவை உரியசை.

**முதலிலுள்ள தனிக்குறில் அசை ஆகாது**

**தனிக்குறில் முதலசை மொழி சிதைத்து ஆகாது.**

✸ அழகு - இதை அழ + கு நிரை நேர் எனல் வேண்டும். பலா - இது குறில் நெடில் இணைந்து நிரையசை. அ + ழகு என்றோ, ப + லா என்றோ சொல்லைச் சிதைத்து முதலிலுள்ள குறிலைத் தனியே அசையாக்கக் கூடாது. ‘அ, ஆ, இழந்தான் என்று எண்ணப்படும்’. ‘அ’ ஆ விட்டிசைப்பதால், முதலிலுள்ள தனிக்குறில் அ அசையாகும். அ ஆ – நேர்நேர்.

**குற்றியலுகரமும் ஒற்றுப் போல அலகு பெறாமை**

**ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.**

✸ அசை கணக்கிடும்போது ஒற்று அலகு (அளவு) பெறாது, அதாவது க என்பதும் நேரசை; கல் என்பதும் நேரசை, குற்றியலுகரமும் ஒற்றைப்போல, அசைக்குக் கணக்கில் சேராது, ‘குழலினி தியாழினி தென்ப’ – நிரைநிரை நேர்நிரை நேர்நேர். ‘தி’ – யில் உள்ள குற்றியலிகரமும் ஒற்றுப்போலவே அலகு பெறாது.

**முற்றியலுகரமும், குற்றியலுகரம் போல் அசை பெறாது**

**முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ**
**நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்**

✸ முற்றியலுகரமும் குற்றியலுகரமும் மொழி சிதைத்து அசைகொள்ளப்படாது. நாணுடையரிவை. இது ‘நாண் உடையரிவை’ என்பது ‘நாணு’ எனப்பிரித்து நாணு டையரிவை என நேர்பு அசை ஆக்கக் கூடாது; பெருமுத் தரையர் - இதில் பெருமு என மொழி சிதையுமிடத்தில், நிரைபசையாகாது. அது பெரு + மு = நிரைநேர் எனவே ஆகும். ஏறு, களிறு – நேர்பு, நிரைபு, ஏ + று எனவோ களி + று எனவோ மொழி சிதைத்து அசை ஆகாது.

**இருவகை உகரமும் ஒற்றுப் பெற்றால் அசையாகும்.**

**குற்றிய லுகரமும் முற்றியலு கரமும்**
**ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.**

✸ குற்றியலுகரம் முற்றியலுகரமும் புணர்ச்சியால் ஒன்றப் பெற்றவழி அசையாகும். வேண்டு - டு அசையாகாது. இது நேர்பு எனப்படும். வேண்டும் - ஒற்றுப்பெற்றதால் வேண் + டும் என அசை பெறும் கடவு – நிரைபு, கடவுள் - கட + வுள் என்று இறுதியில் ஒற்றுப் பெற்ற வழி அசையாகும் (நிரை + நேர்)



FUTURE VISION

**ஓசையும் அசையும் சீரும்**

**அசையும் சீரும் இசையொடு சேர்த்தி**
**வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே.**

- அசை, சீர் என்பன பாட்டின் ஓசை கருதியன அங்கு ஓசையே முக்கியம், 'நிலமிசை நீடுவாழ் வார்' எனச் சொற் பிரிந்து, செப்பலோசை உளது, 'பகவன் முதற்றே உலகு' – சொற் பிரிப்பின்றிச் செப்பலோசை அமைகிறது.

## சீர்

**சீர்கள் இருவகை**

**ஈரசை கொண்டும் மூவசை புணர்ந்தும்**
**சீர் இயைந்து இற்றது சீர் எனப் படுமே.**

- இரண்டும் அசைகளைக் கொண்டு அவற்றின் மேல் மூன்றாவதாக ஓரசை சேர்ந்தும், சீர்பெறத் தம்முள் இசைந்து ஒன்றுபட்டு நிற்பது சீர் எனப்படும்.

**ஈரசைச்சீர்கள் இயற்சீரும் உரிச்சீரும்**

**இயலசை மயக்கம் இயற்சீர்; ஏனை**
**உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.**

- இயலசை எனப்பட்ட நேரும் நிரையும் தம்முள் ஒத்தும் மாறியும் வரும் மயக்கம் இயற்சீர் எனப்படும். நேர் நேர் நிரைநிரை – ஒத்துவந்தன. நேர்நிரை, நிரைநேர் - மாறிவந்தன. ஏனைய உரியசை எனப்பட்ட நேர்பும் நிரைபும் தம்முள் ஒத்தும் மாறியும் வரும் மயக்கம் ஆசிரியவுரிச்சீர் எனப்படும். நேர்பு நேர்பு, நிரைபு நிரைபு – ஒத்துவந்தன, நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு – மாறிவந்தன.

**உரியசைகளுடன் இயலசை 'நிரை' கலத்தல்**

**முன் நிரை உறினும் அன்னவாகும்.**

- முன் 'நிரை' உறுதல், நேர்பு நிரை, நிரைபு நிரை, அன்னவாகும் - ஆசிரிய உரிச்சீராகும்.

**உரியசைகளுடன் இயலசை 'நேர்' கலத்தல்**

**நேர் அவண் நிற்பின் இயற்சீர்ப் பால.**

- நேரசை முன்னேவரின் அது இயற்சீர்ப் பாற்படும் நேர்பு நேர், நிரைபுநேர்.

**நேர், நிரை முன் நேர்பு நிரைபு வரல்**

**இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே**
**நிரையசை இயல வாகும் என்ப.**

- நேர் நிரை எனப்பட்ட இயலசைகளின் முன்னர் உரியசை (நேர்பு, நிரைபு) வரின், அவை நிரைஈற்று இயற்சீர்கள் பாற்பட்டு அவைபோலத் தளை பெறும். நேர் நேர்பு, நேர்நிரைபு, நிரைநேர்பு, நிரைநிரைபு.

**உயிர் அளபெடை அசைக்கும் உறுப்பாதல்**

**அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.**

- உயிரளபெடை அசைக்குறுப்பாகி அலகு பெறுதலுமுண்டு. நற்றாள் தொழாஅர் எனின் - தொழா அர் - நிரைநேர்.



FUTURE VISION

**ஒற்றளபெடையும் அசைக்கும் உறுப்பாதல்**

**ஒற்று அள பெடுப்பினும் அற்றென மொழிப.**

- ஒற்றளபெடையும் மாத்திரை ஒலி அளவு பெற்று. அசைக்கு உறுப்பாதலும் உண்டு, கண்ண் தண்ண்ணெனக்கண்டும் கேட்டும் - நேர்நேர் + நேர்நிரை + நேர்நேர் + நேர்நேர் தண்ண் என்பதில் ஒற்றளபெடை அலகு பெறவில்லை என்பர்.

**வெண்பா உரிச்சீர்**

**இயற்சீர் இறுதிமுன் நேர் அவண் நிற்பின்**
**உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.**

- இயற்சீர் இறுதி முன் - இயற்சீர் நான்கு இறுதியின் நேர் வருதல்.

| | | |
|---|---|---|
| நேர்நேர் + நேர் | - | தேமாங்காய் |
| நேர்நேர் + நேர் | - | கூவிளங்காய் |
| நிரைநேர் + நேர் | - | புளிமாங்காய் |
| நிரைநிரை + நேர் | - | கருவிளங்காய் |

- இவை நான்குமட்டும் வெண்பாவுரிச்சீர்.

**வஞ்சி யுரிச்சீர்**

**வஞ்சிச் சீர் என வகை பெற்றனவே**
**வெண்சீர் அல்லா மூவகை யான.**

- இவ் வெண்பாவுரிச்சீர் அல்லது வெண்சீர் எனப்பட்ட நான்கும் தவிர. ஏனைய மூவகைச்சீர் அனைத்தும் வஞ்சியுரிச்சீர் அல்லது வஞ்சிச்சீர் எனப்படும். இயற்சீர் 4. உரிச்சீர் 4. இயற்சீர் உரிச்சீர் கலந்தவை 8. இவற்றுடன் இறுதியில் நேர் நிரை நேர்பு நிரைபு நான்கையும் சேர்த்தல் மூவகைச்சீர் $16 \times 4 = 64$ சீர் வரும். இவற்றுள் வெண்பாவுரீச்சீர் நான்கு தவிர, ஏனைய அறுபதும் வஞ்சியுரிச்சீர் ஆகும்.

**வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவுக் குரியதாகும்.**

**தன் பா அல்வழித் தான் அடைவு இன்றே.**

- வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவில் மட்டுமே தொடர்ந்து வரும்.

**வஞ்சிப்பாவில் ஏனைச்சீர்களும் வருதல்**

**வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய.**

- வஞ்சிப்பாவில் வஞ்சியுரிச்சீர்களுடன் ஏனைய சீர்களும் கலந்து வரும். அதாவது இயற்சீரும் ஆசிரியவுரிச்சீரும் (இவை ஈரசைச்சீர்கள்) வெண்சீரும் (மூவகைச்சீர்) கலந்துவரும்.

**ஆசிரியப்பாவில் ஒருங்கு வராத சீர்கள்**

**வெண்பா உரிச்சீர், ஆசிரிய உரிச்சீர்**
**இன்பா நேரடிக்கு ஒருங்கு நிலை இலவே.**

- வெண்பாவுரிச்சீரும் (காய்ச்சீர்கள்), ஆசிரியவுரிச்சீரும் (நேர்பு நிரைபு சேர்ந்து வருவன) ஆசிரியப்பாவில் ஓரடிக்கண் ஒருங்கு நிற்றல் இல்லை.

**கலிப்பாவில் வெண்சீரும் ஆசிரிய உரிச்சீரும் மயங்குதல்**

**கலித்தளை மருங்கில் கடியவும் படாஅ**

- கலித்தளையால் வரும் கலிப்பாவில் வெண்சீரும் ஆசிரியவுரிச்சீருமாகிய அவை, நீக்கப்பெறா, ஒருங்கு நிற்கும், (காய் முன் நிரை வருவது கலித்தளை)

FUTURE VISION

**கலிப்பாவில் நேரீற்று இயற்சீர் வராமை**

> **கலித்தளை அடிவயின் நேரீற்று இயற்சீர்**
> **நிலைக்குரித்தன்றே தெரியு மோர்க்கே.**

- கலித்தளையால் வரும் கலிப்பா அடியில் நேர் ஈற்று இயற்சீர் (நேர்நேர் -தேமா, நிரைநேர் - புளிமா) கலந்து நிற்றல் இல்லை.

**வஞ்சிப்பா இறுதியிலும் நேரீற்று இயற்சீர் நில்லாமை**

> **வஞ்சி மருங்கினும் இறுதி நில்லா.**

- வஞ்சியடியிலும் இறுதியில் முற்கூறிய நேரீற்று இயற்சீர்கள் வந்து நில்லா, நிற்பின் வஞ்சிக்குரிய தூங்கலோசை கெடும்.

**ஓர் அசைச்சீர் நான்கும் சீர்களாக வருமிடங்கள்**

> **இசை நிலை நிறைய நிற்குவ தாயின்**
> **அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே.**

- ஒரு பாடலடியின் இசைநிலை நிரம்பப் பொருந்திவருமேல். ஓரசைகளும் (நேரசை, நிரையசை, நேர்பசை, நிரைபசை) சீர்களாக வந்து நிலைபெறும்.

**ஓரசைச் சீர்களைத் தளை கொள்ளும் விதம்**

> **இயற்சீர் பாற்படுத்து இயற்றினர் கொளலே**
> **தளை வகை சிதையாத் தன்மை யான.**

- சீரும் சீரும் சேர்வது தளை, ஓரசைச் சீர்களை இயற்சீர் போலக் கொண்டு (தேமா, புளிமா, கூவிளம் கருவிளம்) தளைகொள்க.

**வெண்சீர் ஈற்றசையின் ஓர் இயல்பு**

> **வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே.**

- வெண்சீர் இறுதி அசை காய் என்பது (நேர்), அது இயற்சீர் இறுதி நிரையசைபோல (கூவிளம், கருவிளம்) நின்று தளை கொள்ளும், காய் முன் நேர் = இயற்சீர் வெண்டளை, காய் முன் வெண்சீர் முதல் நேரசை (தேமாங்காய், கூவிளங்காய்) வெண்சீர் வெண்டளை, நிரையாயின் கலித்தளை, நேர்முன் நேர் வந்தலும் அது நிரை முன் நேர் போல வெண்டளையாவதால் இவ்வாறு கூறப்படுகிறது.

**ஆசிரியப்பாவில் வெண்சீர் (காய்ச்சீர்) கலந்து வருதல்**

> **இன்சீர் இயைய வருகுவதாயின்**
> **வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.**

- இனிய இயற்சீருடன் (தேமா முதலியன) பொருந்தி வருமேல் வெண்சீர்கள் (காய்ச்சீர்) ஆசிரிய அடியில் கலந்து வரும்.

**ஆசிரியப்பாவில் வஞ்சிச்சீர் கலந்து வருதல்**

> **அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்**
> **ஒன்றுதல் உடைய ஓரொரு வழியே.**

- அந்நிலை மருங்கின் - முன்சொன்ன அந்த ஆசிரிய அடியின்கண். வஞ்சி உரிச்சீர் - தேமாங்கனி புளிமாங்கனி கூவிளங்கனி, கருவிளங்கனி, ஆசிரியத்துள் வஞ்சிச்சீர், சில போது பொருந்திருவம், ஓரசைச்சீர் நான்கு. ஈரசைச்சீர் பதினாறு, மூவகைச்சீர் அறுபத்துநான்கு – ஆகச்சீர் எண்பத்து நான்கு.

- ஈரசைச்சீர் பதினாறிலும் பெரும்பான்மை இயற்சீர் நான்கு. சிறுபான்மை இயற்சீர் ஆறு என்பத்தாகும். ஆசிரியவுரிச்சீர் ஆறு மூவகைச்சீர் 64 இல் வெண்பாவுரிச்சீர் 4; ஏனைய அறுபதும் வஞ்சியுரிச்சீர்.



FUTURE VISION

# MATERIAL தேவைக்கு

## TNPSC: GR –I & II (P), GR –IV

**(TAMIL & ENGLISH MEDIUM),**

## PG: TRB - TAMIL, ENGLISH,

## MATHS & COMPUTER SCIENCE

## TET (P1 & P2),

# CONTACT -90420 30163

*****************************************************

## FUTURE VISION STUDY CENTRE

**2ND FLOOR, AVK MARUTHI PLAZA,**

**OPP. HOTEL LAKSHMI PRAKASH,**

**SKS HOSPITAL ROAD,**

**SALEM – 636 004**